முதலாமச்சர் ஸ்டாலின் அவர்களை நேற்று (15.6.2025) கல்லணை சுற்றுலா மாளிகையில் தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களின் விவசாயிகள் மற்றும் விளசாபிகள் சங்க பிரதிநிதிகள் சந்தித்து மேட்டூர் மற்றும் கல்லணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு குறித்த காலத்தில் தண்ணீரை திறந்து வைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தங்களது கோரிக்கை குறித்த மனுவை அளித்தனர்.

முதலமைச்சர் மு.க. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.6.2025) கல்லணை சுற்றுலா மாளிகையில், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதையொட்டி டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் வேளாண் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருமதி பிரியங்கா பங்கஜம், வ. மோகனச்சந்திரன், மா. பிரதீப் குமார், ஹெச்.எஸ், ஸ்ரீகாந்த், திருமதி. மு.அருணா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று 15.6.2025) கல்லணை சுற்றுலா மாளிகையில், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் சந்தித்து, மேட்டூர் மற்றும் கல்லணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு குறித்த காலத்தில் தண்ணீரை திறந்து வைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தங்களது கோரிக்கைகள் குறித்த மனுவை அளித்தனர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது!

தூத்துக்குடி.ஜூன்.16-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட ஒன்றிய- நகர- பகுதி- பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் 15.06.2025 அன்று தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மற்றும் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான கீதா ஜீவன் மற்றும் இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில், சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழக செய்தித் தொடர்பு மாநில துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், சமூக வலைத்தளங்களை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து சமூக வலைத்தள செயற்பாட்டாளர் விக்னேஷ் ஆனந்த் அவர்களும் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.எம்.மதியழகன் வரவேற்புரை வழங்கினார். மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அருண் சுந்தர் அவர்கள் நன்றியுரை கூறினார்.

மேடவாக்கம் ப.ரவி தலைமையில் – மேடவாக்கம் ஆர்.எஸ்.லோகேஷ்வரா ஏற்பாட்டில்

மேடவாக்கத்தில் தொடக்கப் பள்ளிக்கு பெஞ்ச் - டேபிள் வழங்கும் விழா!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி – ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன். 16-

முத்தமிழ் அறிஞர், செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், தலைமை பொதுக் குழு உறுப்பினர், முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர் மேடவாக்கம் ப.ரவி தலைமையில் புனித தோமையார்மலை தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மேடவாக்கம் ஆர்.எஸ்.லோகேஷ் வரா ஏற்பாட்டில் இன்று (16.6.2025 - திங்கட்கிழமை) மதியம் 12 மணிக்கு, மேடவாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூபாய் 9 லட்சம் மதிப்பீட்டில் ஒன்றிய இளைஞர் அணி சார்பில் பள்ளி மாணவர்களுக்கு பென்ச் மற்றும் டேபிள் வழங்கும் விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்த் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு பள்ளிக்கு வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் புனித தோமையார்மலை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஜி.வெங்கடேசன், மேடவாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் சிவபூஷணம் ரவி, எச்.டி.போஸ், சங்கீதா பாரதி ராஜன், கல்பனா சுரேஷ், கு. வேணுகோபால், நாகப்பன், எஸ்.சுரேஷ், ஜெ.கமலகண்ணன், இ.பி.நடராஜன், கே.ரவி கேசவன், ஜி.கோவிந்த ராஜுலு, கௌரி முருகன், அம்மு கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.கிஷோர், கே. ராஜேஷ்,எஸ்.ஆர்.வினோத்குமார், டி.சேட்டு, என். மூர்த்தி, எம்.பி.என்.பாஸ்கர், எம்.என்.பி.ரமேஷ், எம்.ஆர்.ரமேஷ், ஏ. வி.எம்.முருகன், ஆர்.ஏ.மோகன் பாபு, கே.சரண்ராஜ், கே.ஆனந்தன், பி.ஆனந்தன், ஆர். சுந்தர்ராஜன், எஸ். ரமேஷ் என்.ஆர்.கே.கேசவன், என்.ஆகாஷ், த. பழனி, சரவணன், தாமோதரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - ஆர்.காந்தி பங்கேற்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. கலந்தாலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகின்ற (18–06–2025 - புதன்கிழமை) மாலை 4 –00 மணியளவில் காஞ்சிபுரம், எம்.எம்.லேகசி ஹோட்டல் கூட்ட அரங்கில் எனது (மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ) தலைமையில் நடைபெறுகிறது.

எனவே கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

க.சுந்தர் எம்.எல்.ஏ.
செயலாளர்,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

தலைமை கே.வி.ராஜன்! முன்னிலை அ.முருகன்! பெரம்பூர் வடக்குப் பகுதி

34வது வட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

ஆர்.டி.சேகர் எம்எல்ஏ , கன்னிகை கோ.ஸ்டாலின் பங்கேற்பு!

சென்னை,ஜூன்.16-

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்கு பகுதி, 34 வட்ட தி.மு.க. பாக முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் 14.06.2025 அன்று கொடுங்கையூர் பாலாஜி திருமண மண்டபத்தில் வட்ட செயலாளர் கே.வி. ராஜன் தலைமையில் பகுதி செயலாளர் அ.முருகன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இதில் தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் பாகம் வாரியாக உறுப்பினர்களின் பெயர் மற்றும் கைபேசி எண்களை கேட்டு உறுதி செய்து கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் தயாளன் எஸ்.ஆர். கமலக்கண்ணன் , மாமன்ற உறுப்பினர் ஷர்மிளா காந்தி, பகுதி கழக நிர்வாகிகள் ஜியாவுதீன் , செந்தூர் பாண்டியன் , லீலா வேலு , லதா மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.டி.சேகர் வர்மா, என். நந்தகோபால், வட்ட கழக நிர்வாகிகள் யுவநாதன் , சத்தியேந்திரன் , முத்தரசன், சுமதி, ராஜகோபால், போத்தி , குமரேசன் , தினகரன், யூசுப் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அரசு பள்ளிகளில் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று முதலிடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் ஆகியோர் ஆலோசனை படி திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக துணை செயலாளர் டாக்டர் வி.சி.ஆர்.குமரன் தமது சொந்த நிதியில் 4 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் இலவச டேப் சீருடைகள் வழங்கினார் உடன் பள்ளி மாணவ மாணவிகள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் உள்ளனர்.